5th March 1969]

"Rupee a Measure" Scheme

* 127 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the news item in the "Madras Information" for June 1968, which states that the Hon. the Minister for Public Works (Present Chief Minister) in an interview with the correspondent of the *Manchester Guardian* had said that rice is sold at one rupee a measure at Madras, Coimbatore and Madurai, is correct?

"ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி" திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

"மெட்ராஸ் இன்பர்மேஷன், ஜூன் 1968" இதழில் சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப் படுவதாக பொதுப்பணி அமைச்சர் (தற்போதைய முதல் அமைச்சர்) மான்செஸ்டர் கார்டியன் நிருபரிடம் கூறியதாக வந்த செய்தி சரியா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பொதுப்பணி அமைச்சர் மதுரையிலும் "ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி" போடப்படுவதாக கூறவில்லை. மான்செஸ்டர் கார்டியன் நிருபர் "சென்னை, மதுரை, கோவை முதலிய இடங்களில் மட்டும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை அமுலாக்கிவிட்டு, மற்ற இடங்களில் விரிவு படுத்தப்படாமலிருந்தால், ஏனைய மக்களுக்கு அதிருப்தி ஏற்படாதா?" என்று கேட்ட கேள்விக்கு பொதுப் பணி அமைச்சர் பதிலளிக்கையில் இந்தப் பிரச்னையை அக்கோணத்திலிருந்து நோக்கக்கூடாது என்றும், சென்னை, மதுரை, கோவையிலுள்ள மக்கள் பெரும்பாலோர் தினசரித் தேவைக்கான அரிசிக்கு வெளி மார்க்கட்டையே நம்பியிருப்பதால், அவர்கள் இம்மாதிரியான சில சலுகைகளுக்கு உரியவர்கள் என்றும், மற்ற இடங்களில் அரிசியின் விலை குறைந்து வருகிறது என்றும், அரிசியும் நிறையக் கிடைக்கிறது என்றும் கூறியதாகத்தான் "மெட்ராஸ் இன்பர்மேஷனில்" வெளியிடப்பட்டுள்ளது. பொதுப் பணி அமைச்சர் மதுரை மக்கள் படியரிசித் திட்டம் போன்ற சலுகைகளுக்கு உரியவர்கள் என்று தான் கூறியுள்ளாரே தவிர, அங்கு ரூபாய்க்கு படி அரிசி வழங்கப்படுவதாக குறிப்பிட்டுக் கூறவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, முன்பு அப்படிக் குறிப்பிடாமல் இருந்து அது பத்திரிகையில் வந்திருந்தாலும் இனிமேலாவது அப்படிப் போடுவதற்கு முயற்சி செய்வார்களா? எப்போதிருந்து போடப்படும்?

Illicit transport of cholam

* 128 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it was alleged at the meeting of the North Arcot District Development Council held in November 1968, that 5,000 bags of Cholam were illicitly transported; and

(*b*) if so, the action taken thereon?

[5th March 1969

சோளம் கடத்தப்பட்ட நிகழ்ச்சி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 நவம்பரில் நடந்த வட ஆற்காடு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் 5 ஆயிரம் மூட்டை சோளம் கடத்தப்பட்டதாக புகார் கூறப்பட்டதா ?

(இ) ஆமெனில், இதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

Retirement age of District Judges

* 129 Q.—Thiru D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:

(*a*) whether the age of retirement of District Judges has been raised to 58; and

(*b*) if so, whether there is any proposal to extend the same benefit to Sub-Judges and other Subordinate Judicial Officers ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

Thiru D. SANTOSHAM : Sir, the age limit of 58 for District Judges and 55 for other Subordinate Judges causes great disappointment and frustration to the lower cadre of officers. Though they have been expecting promotion to the cadre of District Judges and retire from that position, suddenly because of the raising of the age limit for District Judge, many of them have been deprived of the opportunity for promotion, which they have been hoping for throughout their period of service. Another matter which requires mention is this. For the judicial service, the recruitment age limit is 33, while for the other services, the age limit is 25. So, they are recruited very late and to make them retire within a period of 22 years of service does not appear to be very right. Taking all these factors into consideration, will the Government be pleased to consider the question of raising the age of retirement for Sub-Judges and District Munsifs also to 58 ? I think it would be just if the Government concede this request.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்தக் காரணங்களை யெல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பரிசீலித்தது. பொதுவாக அரசாங்க அலுவலர்களுக்கு வயது 55 வரையிலா 58 வரையிலா என்ற போராட்டம் இருந்துகொண்டேயிருப்பதால் இப்போதைக்கு இதை ஒத்தி வைப்பது என்று அமைச்சரவை முடிவெடுத்திருக்கிறது.

Trial of cases under Prevention of Corruption Act, 1947

* 130 Q.—Thiru D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether in Madras City the Sessions Judge is appointed as the Special Judge for the trial of cases under the provisions of the Prevention of Corruption Act; and

(*b*) if so, the reasons therefor?